# தீர்ப்பளிக்கும் ஒழுங்கு : ஓர் இஸ்லாமியப் பார்வை

**Dr. MIM. Jazeel [1] and Mr. MB. Fowzul [2]**
[1]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
[2] Department of Islamic Studies, Eastern University, Sri Lanka.
(jazeelmi@seu.ac.lk / mjazeel@hotmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*இஸ்லாமிய நீதிப் பரிபாலன முறைமையில் தீர்ப்பளிக்கும் ஒழுங்கு மிகப் பிரதானமானதாகும். இந்தவகையில் நீதிபதியின் தீர்ப்பு நீதமானதாக, பக்கசார்பற்றதாக, வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என்பதில் இஸ்லாத்தின் கரிசனை வலுவானதாகும். எனவே, நீதிபதிதீர்ப்பளிக்கும் போது வாதி, பிரதிவாதியுடன் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள், தீர்ப்புக்கான மூலாதாரங்கள், தீர்ப்பை வழங்கும் போது கொண்டிருக்க வேண்டிய ஒழுங்குகள் தொடர்பில் இஸ்லாமிய சட்ட மரபான ' ரீஆவின் பிரமாணங்களைத் தொகுத்தறிதலை இவ்வாய்வு பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளது. பண்புசார் முறைமையிலான இவ்வாய்வு, இஸ்லாமிய முன்னோடிக் காலங்களிலும், பின்னரும் பிரசுரிக்கப்பட்ட தீர்ப்பளிக்கும் ஒழுங்கு(அதப் அல்-கழா) பற்றிய பகுப்பாய்வினை அடிப்படைகளாகக் கொண்டுள்ளது. தீர்ப்பளித்தலுடன் தொடர்பான சட்ட ஒழுங்குகள் பற்றிய இஸ்லாத்தின் வழிகாட்டல்களை நேர்த்தியாகக் கட்டமைத்திருப்பது இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும். இவ்வாய்வு நீதிபதிகள், காழி நீதவான்கள், சட்டத்தரணிகள், நடுவர்கள் போன்ற நீதிப் பரிபாலனத்துடன் தொடர்பானவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக அமையும்.*

*பிரதான சொற்கள்: இஸ்லாத்தில் நீதி, நீதிப் பரிபாலனம்,தீர்ப்பளிக்கும் ஒழுங்கு (அதப் அல்-கழா)*

## அறிமுகம்

மனித வரலாற்றில் நீதி பெறுமானமிக்கதோர் உயர்ந்த பண்பாகும். "நீதி செலுத்துங்கள். அது இறையச்சத்திற்கு மிக நெருக்கமானதாகும் (05:08),"…மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால் நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான் (04:58) என்ற அல்குர்ஆனிய வசனங்களும், நீதி செலுத்துபவர்கள் மறுமையில் அர்ஷின் நிழலில் நிழல் பெறுவர், ஒளியிலான மேடையில் வீற்றிருப்பர் எனும் ஹதீஸ் வாசகங்களும் நீதியாகத் தீர்ப்பு வழங்குவதன் அவசியத்தையும் உன்னதத்தையும் உணர்த்துகின்றன.நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளில் ஒன்றாக நீதித்துறையும் அமைந்திருந்தது. 'அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் அவர்களிடையே தீர்ப்பளிப்பீராக'(அல் குர்ஆன் 05:48) போன்ற அல்குர்ஆன் வாசகங்கள் நபி (ஸல்) அவர்களின் நீதி செலுத்தும் பண்பினைத் தெளிவாக விளக்குகின்றன. 'உண்மையை அறிந்து கொண்டு அநியாயமாகத் தீர்ப்பளிப்பவன் நரகை அடைவான்' என்றும்நபி (ஸல்) கடுமையாக எச்சரித்தார்கள். எனவே தான் இஸ்லாத்தின் தீர்ப்பளிக்கும் ஒழுங்கு,அதன் சட்ட விதிமுறைகள் பற்றி அறிவது முஸ்லிமின் ஆன்மீக வாழ்வை நெறிப்படுத்தவல்லது. அதற்கமைய இவ்வாய்வு தீர்ப்புக்கான மூலாதாரங்கள், தீர்ப்பளிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய மனோ நிலை மற்றும் கள நிலைகள், வாதியும், பிரதிவாதியும் அணுகப்பட வேண்டிய விதங்கள் போன்றன பற்றிப் பகுப்பாய்வு செய்கிறது.

## ஆய்வு முறைமை

இஸ்லாமிய தீர்ப்பளிக்கும் ஒழுங்கு (அதப் அல்-கழா) பற்றிய பகுப்பாய்வை இவ்வாய்வுக் கட்டுரை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அறபு மொழியில் அமைந்த ஆக்கங்கள் இவ்விடயத்தைப் பெரும்பாலும் கோட்பாடு ரீதியாகவே நோக்க முற்படுகின்றன. இந்த வகையில் "அதப் அல் கழா" எனும் முன்னோடிக் கால ஆக்கங்கள் நீதிபதிகள் தீர்ப்பளிக்கும் போது ஒழுக வேண்டிய ஒழுங்குகள், அவர்களது தீர்ப்புக்கான மூலாதாரங்கள் பற்றி விபரிக்கின்றன. எனவே,இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல் குர்ஆன், அஸ்ஸுன்னா, பிரதான இமாம்களின் கருத்துக்கள், இஸ்லாமிய வரலாற்று அனுபவம், நவீன இஸ்லாமிய சிந்தனையாளர்களின் கருத்துக்கள் என்பனவும் இஸ்லாமிய கண்ணோக்கிற்கான அடிப்படைகளாக அமைகின்றன.

## தீர்ப்பளிக்கும் ஒழுங்கு

முஸ்லிம் சமூகத்தின் நீதிச் செயற்பாட்டின் பண்பினைக் கூறும் இரு பதங்களை அல்குர்ஆன் கொண்டுள்ளது.'ஹுக்ம்','கழா'என்ற மூலத்திலிருந்து பிறந்தவையே அவ்விரு பதங்களாகும். இவற்றுள் 'கழா' என்ற சொல் மொழி ரீதியில் சட்டமியற்றுதல், தீர்மானித்தல்,முடிவெடுத்தல் என்ற பொருளினைக் குறிக்கிறது. சட்ட ரீதியில் அது தெய்வீக வழிகாட்டுதலின் அடிப்படையில் பிணக்குகளைத் தீர்த்து வைத்தலைக் குறிக்கும்.நபி (ஸல்) அவர்களது காலத்தில் நீதிப்பரிபாலனம் தனிநபர்கள், குழுக்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல் எனக் கொள்ளப்பட்டது. நபி (ஸல்) அவர்களினால் தனிப்பட்ட ரீதியில் நீதி செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டது. ஒரு நீதிமன்றில் வழக்கோடு தொடர்புபட்ட அனைத்து தரப்பினரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். வாதி, பிரதிவாதி, சாட்சிகளிடம் வாக்கு மூலம்

பெறப்பட்டது. ஆரம்பத்தில் வாதி சான்றினை (பைய்யினா) சமர்ப்பிப்பதையும், சான்றுகள் இல்லாத சந்தர்ப்பத்தில் பிரதிவாதி சத்தியப்பிரமாணம் செய்வதையும் தீர்வுக்கான அடிப்படையாக நபி (ஸல்) அவர்கள் கொண்டார்கள். விசாரணையின் பின்னர் நபி (ஸல்) அவர்கள் வழங்கிய தீர்ப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.நபி (ஸல்) அவர்களின் இத்தகைய செயற்பாடுகள் தீர்ப்பளிப்பதற்கான ஒரு நிறுவப்பட்ட மாதிரியாக அமைந்தது எனலாம்.

**தீர்ப்புக்கான மூலாதாரங்கள்**

நபி (ஸல்) இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் விஸ்தரிப்பின் பின்னர், தூர இடங்களில் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பதற்கு நபித்தோழர்களை நியமித்து வழக்குகளைக் கையாளுவதற்கான அறிவுறுத்தல்களை வழங்கினார்கள். நீதித்தீர்மானத்தை பெறுவதற்கான வழிமுறை பற்றிய நபி (ஸல்) அவர்களின் வினாவுக்கு முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களது பதில் இங்கு குறிப்பிடத்தக்கது. இஸ்லாமிய முதன்மை மூல ஆவணமான அல்குர்ஆன், அடுத்தமூல ஆவணமான அஸ்ஸுன்னா (நபிவழி), இறுதியானதாக'இஜ்திஹாத்' என முஆத் அவர்கள் விளக்கியமை ஒரு நீதிபதி தெய்வீக வழிகாட்டுதல் தெளிவாக குறிப்பிடப்படாத நிலையில் தனது சிந்தனாத்திறனைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்பட்டுள்ளதற்கான சான்றாகும்.

'கிலாபா ராஷிதா' காலப்பிரிவில் தீர்ப்பளித்தல் செயற்பாட்டிக்கான வழிமுறையை, விதிகளை கலீபா உமர் (ரழி) அவர்கள் அபூ மூஸா அல் அஷ்அரி(ரழி) அவர்களுக்கு அனுப்பிய பின்வரும் கடிதம் காண்பிக்கின்றது.

> 'உங்களுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள வழக்குகளை விளங்கிக் கொள்ள முயற்சிப்பீர். எவ்வித பெறுமதியும், அமுலாக்கமும் இல்லாத விண்ணப்பங்களை விசாரிப்பது தேவையற்றதாகும். நீதிமன்றத்தில் உங்களுக்கு முன்னால் இருப்பவர்களைச் சமமாக கருதுங்கள். சமூக அந்தஸ்துடைய மக்கள் உமது சார்பு நிலையில் நம்பிக்கை கொள்ளாமலும், நலிவுற்ற மக்கள் உம்மிடம் நீதி பெறுவதிலிருந்து நம்பிக்கை இழக்காமலும் இருக்கட்டும். அத்தோடு, வாதி சம்பந்தப்பட்ட சாட்சிகளை முன்னிறுத்த வேண்டும். பிரதிவாதி சத்தியப் பிரமாணம் செய்து மறுக்க வேண்டும். முஸ்லிம்களிடையான பிணக்கில் பொருத்தமான உடன்பாடு காண்பது அனுமதிக்கப்பட்டாலும், தடுக்கப்பட்டதை அனுமதித்தல், அனுமதிக்கப்பட்டதைத் தடுத்தல் என்ற உடன்பாடு ஏற்புடையதல்ல. வாதி தனது உரிமையை நிரூபிப்பதற்கான சான்றைச் சமர்ப்பித்தால், அவ்வுரிமையைப் பெற்றுக் கொடுப்பீர். முடியாவிடில் அவ்வழக்கை தள்ளுபடி செய்வீர். நீதி செலுத்துவதில் சந்தேகத்திலிருந்து தெளிவு பெறுதல் சிறந்ததாகும். நீர் தீர்ப்பளித்த வழக்கை மீளாய்வு செய்து, தவறுகளை ஏற்றுக் கொண்டு சத்தியத்திற்குத் திரும்புவதை எதுவும் தடுத்து விடக் கூடாது. சத்தியம் மறுதலிக்க முடியாத நிலையான ஒன்று. பிழையான தீர்ப்பில் விடாப்பிடியாக நிலைத்திருப்பதை விட சரியான தீர்ப்பை ஏற்பது சிறந்தது. பொய்ச்சாட்சியம் வழங்கியதாக நிரூபிக்கப்பட்டவர், குற்றத்துக்கான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர், உறவினர்கள், ஊழியர்கள் தவிர்த்து முஸ்லிம் சமூகத்திலுள்ளோர் ஒருவர் மற்றொருவருக்கு சாட்சியமளிக்கலாம். தனது அடியார்களின் குற்றங்களில் சாட்சியம், சத்தியம் மூலம் நிரூபிக்கப்பட்டவற்றைத் தவிர, அவர்களது ஏனைய இரகசியங்களை அல்லாஹ் மறைத்து தண்டனையை நீக்கிவிடுகிறான். உமக்கு முன்னாலுள்ள வழக்குகளை முழுமையாகப் புரிந்து கொள்ளுங்கள். அல்குர்ஆன்,அஸ்ஸுன்னாவில் தெளிவாக குறிப்பிடப்படாத விடயத்தில், முன்னைய தீர்ப்புக்களோடு ஒப்பிட்டு, சத்தியத்திற்கு மிகவும் நெருக்கமான, பொருந்திச் செல்கின்ற விதத்தில் தீர்ப்பளிப்பீர். வழக்குகள், பிணக்குகளில் கோபம், பயம், கொடூரம், கிளர்ச்சி, சண்டை ஆகிய தன்மைகளிலிருந்து முற்றாக நீங்கியிருப்பீராக. நீதிமன்றம் அல்லாஹ்விடம் நற்கூலியைப் பெற்றுத்தருகின்ற, அல்லாஹ்வுக்கு விருப்பமான சத்தியத்தை நிலைநாட்டும் ஓர் இடமாகும்.' (இப்னுல் காஸ், 2007)

இஸ்லாமிய வரலாற்றின் முன்னோடிக் காலப்பகுதியில் தீர்ப்பளிக்கும் ஒழுங்கு பற்றிய விபரம் அக்கால இலக்கியங்கள்,நீதிபதிகளின் சுயவிபரக் கோவை,'ஆதாபுல் காழி' பற்றிய எழுத்துக்கள், வரலாற்று மூலங்கள் என்பவற்றில் காணக் கிடைக்கிறது. 'வகீஉ'வின் 'அஹ்பாருல் குழாத்'எனும் நூல் இவற்றுல் காலத்தால் முந்தியதாகும். தீர்ப்பளிக்கும் ஒழுங்கைத்தொகுத்துக் கூறும் 'அல் அஹ்காமுல் குப்ரா' எனும் நூல் பாடநூலாகப் பயன்பட்டது (MK.Masud et al, 2006). இமாம் கஸ்ஸாலி அவர்கள் நீதிபதியின் தீர்ப்பு முறை ஓர் அறிஞனின் கல்விசார் செயற்பாட்டை ஒத்திருப்பதாகக் காண்கின்றார். நடத்தையின் ஒழுக்கவியல் தன்மை தொடர்பான வினாவுக்கு ஒரு கல்வியாளன் அறிவார்ந்த செயற்பாட்டின் மூலம் தீர்வினைக் கண்டறிவது போல, ஒரு நீதிபதி வழக்கு தொடர்பில் தீர்ப்பளிக்க முனைகிறார் என உவமிக்கிறார் (MK.Masud et al,2006). இதற்கமைய ஒரு சட்ட நிபுணரைப் போலவே நீதிபதியும் தனது தீர்ப்புக்கான முதன்மை மூல ஆவணங்களாக அல்குர்ஆன்,அஸ்ஸுன்னாவையே கொண்டுள்ளார். இக்காலப்பிரிவுக்கு முன்னர் ஜாஹிலிய்ய கால பிணக்குகளைத் தீர்ப்பதற்கும், தீர்ப்பளிப்பதற்குமாக கோத்திர வழக்காறுகளே கொள்ளப்பட்டன. அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் தீர்ப்பளிப்பதற்கான தத்துவார்த்த வழிகாட்டுதல்களையும், அடிப்படை நியதிகளையும், பெறுமானங்களையும், நெறிமுறைகளையும் கொண்டுள்ளன. மூல ஆவணங்களில் ஷரீஆ வெளிப்படையாகக் குறிப்பிடாத விடயம் தொடர்பில் நீதிபதி தனது சிந்தனாற்றலைப் பயன்படுத்தி

தீர்ப்பளிக்க முயன்றுள்ளார் (C.E. Besworth ef el,1991).

பிற்கால ஆட்சிக் காலப்பிரிவில் தீர்ப்பளிப்பதற்காக வேறு பல ஆவணங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டன எனலாம். எடுத்துக்காட்டாக,உஸ்மானிய ஆட்சிக்காலப் பிரிவில் நீதிபதியின்தீர்ப்புக்கான ஆவணமாக ஷரீஆவின் மூல ஆவணங்கள், நாட்டின் சட்டத் தொகுப்பு, அரசாங்க சுற்று நிருபங்கள், அரச தீர்மானங்கள், பிரபலமான மார்க்கத் தீர்ப்புக்கள் என்பன கொள்ளப்பட்டன. மேலும்,உஸ்மானிய ஆட்சியாளர்கள் வழக்காறு, அரசரின் பிரகடனங்கள், ஷரீஆவின் நியமங்கள், நீதிபதி, இராணுவ தளபதிகளினுடைய தீர்ப்புக்கள் என்பனவற்றையும் சட்டத்தின் கூறுகளாக அங்கீகரித்திருந்தனர் (C.E. Besworth ef el,1991).

**நீதிபதியின் சுய அறிவைப் பயன்படுத்தல்**

நீதிபதிதனது சிந்தனாற்றலை தீர்வுக்கான அடிப்படையாகக் கொள்வதில் அறிஞர்களிடத்தில் ஏகோபித்த உடன்பாடு காணப்படுகிறது. சாட்சிகள் தொடர்பில் குறை, நிறைகளைக் கண்டறிவதில் நீதிபதியின் அறிவுத்திறன் ஏற்புடையது. சாட்சியத்தில் குறையிருப்பதாக நீதிபதி கருதுவாராயின், அது பற்றி மேலதிக விசாரணை மேற்கொள்வது அவசியமாகும். சாட்சியங்களுடைய நேர்மையைநீதிபதிஅறிந்திருப்பாராயின் அச்சாட்சியங்களை ஏற்றுக் கொள்வதில் எவ்வித தயக்கமும் அவசியமில்லை (இப்னுல் காஸ், 2007). ஆயினும், வழக்காளிகளின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் வழக்கொன்றில் நீதிபதி தனது சுய அறிவை உபயோகித்தல் தொடர்பில் இஸ்லாமிய சட்ட நிபுணர்களிடத்தில் ஒருமித்த கருத்து இல்லை. இச்சந்தர்ப்பத்தில் விசாரணையிலிருந்து பெறும் சான்றுகளையும் ஒப்பீடுகளையும் தவிர வேறு எதனையும் அடிப்படையாகக் கொள்ள முடியாது என இமாம் மாலிக்,இமாம் அஹ்மத் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். சுய சிந்தனையை அடிப்படையாகக் கொள்வதைநீதிபதிகள் தமது சுய இலாபங்களுக்கான வாய்ப்பாக கொள்ளலாம் என்ற அச்சம் இஸ்லாமிய அறிஞர்களிடையே நிலவுகிறது என்பதையே,'தற்கால நீதிபதிகளின் குழப்ப நிலையைக் கருத்திற் கொண்டு நீதிபதி தனது சுய அறிவைக் கொண்டு தீர்ப்பளிப்பதை அனுமதிக்க முடியாது' என ஹனபி சிந்தனைப் பிரிவினர் வாதிக்கின்றனர். இதற்கமைய அஷ்ஷாபிஈ அவர்கள் 'தீய நீதிபதிகள் இல்லை என்றால், அவர்கள் தமது அறிவைக் கொண்டு தீர்ப்பு வழங்குவது சிறப்புக்குரியது என்பேன்' எனக் குறிப்பிடுகிறார். ஸஹாபாக்கள், தாபிஈன்கள் காலத்திற்குப் பின்னர் மோசடிக்காரர்கள் அதிகமாகக் காணப்படுவதால்,'நீதிபதிசுய அறிவை தீர்வுக்கான அடிப்படையாக கொள்வதை முற்றாக தடை செய்வதே சிறந்தது' என இப்னு ஹஜர் அல் அஸ்கலானி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (அஷ்ஷஃரானி, 1958).

இஸ்லாமிய பிக்ஹ் நூற்கள் தீர்ப்புக்கான மூல ஆவணமாகக் கொள்ளப்பட்டுள்ளன. குறித்த நீதிபதி தான் சார்ந்திருந்த சிந்தனைப் பிரிவின் அபிப்பிராயத்திற்கேற்பவே தீர்ப்பை அமைத்தார். இந்த வகையில் அப்பாஸிய ஆட்சியின் ஆரம்பப் பகுதியில் 'ஹனபி' சிந்தனை,உஸ்மானிய ஆட்சியில் 'ஹனபி' சிந்தனை, ஸ்பெய்னின்உமைய ஆட்சியில் 'மாலிகி' சிந்தனை சார்ந்த இலக்கியங்கள் ஆவணங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

நீதிபதியின் தீர்ப்பு சரியானது, நடைமுறைக்கு ஏற்றது என்பதை உறுதிப்படுத்த பின்வரும் நிபந்தனைகளை இஸ்லாமிய சட்ட நிபுணர்கள் விதந்துரைக்கின்றனர்.

I. முறைப்பாடு முறையாக விண்ணப்பிக்கப் பட்டிருத்தல்
மனித உரிமை தொடர்பான விடயங்களில் ஒருவர் தனது உரிமைகளைக் கோரி முறைப்பாடு செய்தல் வேண்டும் (அல் ஹுமைழி, 1989).

II. தீர்ப்பின் வார்த்தைப் பிரயோகத்தில் கட்டளைப் பிரமாணம் அமைந்திருத்தல் வேண்டும். 'தீர்ப்பளித்துள்ளேன்','முடிவெடுத்துள்ளேன்','உன் மீது தீர்ப்பைப் பிரயோகித்துள்ளேன்' என வார்த்தைகள் அமைதல் வேண்டும். (இப்னு ஷிஹ்னா, 1973)

III. தீர்ப்பு போதுமான தெளிவைப் பெற்றிருத்தல் வேண்டும். தீர்ப்பின் முறை, யார் சார்பான தீர்ப்பு, யாருக்கெதிரான தீர்ப்பு என்பன சந்தேகம், குளறுபடி, இரட்டை அர்த்தங்கள் இன்றி குறிப்பிடப்படல் வேண்டும். (இப்னு பர்ஹுன், 2003)

IV. பிரதிவாதியின் சான்றுகள் ஏற்றுக் கொள்ளப்படாமைக்கான நியாயங்களை முன்வைத்தல் வேண்டும்.

V. நீதிபதி தீர்ப்பை வெளியிடும் வேளை அச்சபையில் வழக்காளிகள் இருசாராரும் சமூகமளித்திருத்தல் வேண்டும். ஆயினும், பிரதிவாதி குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கிய பின் அவர் தலைமறைவாகி விடுவாராயின், அவர் சமூகமளிக்காத போதிலும் தீர்ப்பளிப்பதில் தவறில்லை என அஷ்ஷாபிஈ குறிப்பிடுகிறார் (அல் ஹுமைழி, 1989).

VI. வழங்கப்படும் தீர்ப்புகள் இஸ்லாமிய சட்டங்களோடு இயைந்து செல்வதாகவும் அல்குர்ஆன்,அஸ்ஸுன்னா,இஜ்மா,கியாஸ் ஆகிய மூலாதாரங்களுடன் முரண்படாமலும் இருத்தல் வேண்டும் (அஷ்ஷாபிஈ, 2002).

மேலும், பிரதிவாதி திருப்தியடையும் வரை தீர்ப்புக்கான காரணங்களைத்தெளிவுபடுத்துதல் சிறந்த செயற்பாடு என இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்கள் கொள்கின்றனர். அஷ்ஷாபிஈ (2002) அவர்கள் பின்வருமாறு விபரிக்கின்றார்.

'ஒருவருக்கு தீர்ப்பளிக்க விரும்பும் நீதிபதி அவரை உட்கார வைத்து, தனது தீர்ப்புக்கான

காரணிகளைப் பின்வருமாறு விளக்குவது எனக்கு விருப்பத்திற்குரியதாகும். 'நீ இவ்வாறான சான்றுகளை முன்வைத்துள்ளாய். உமக்கெதிரான சான்றுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. உமது வழக்காளிதனது இவ்வாறான நியாயங்களைக்கொண்டுள்ளார். முன்னர் நான் இவ்வாறுதான் தீர்ப்பளிக்க கருதினேன்.' என்றவாறு பிரஸ்தாபிப்பது பிரதிவாதியின் உள்ளத்தை ஆற்றுப்படுத்தும். தான் முன்வைத்த சான்றுகளை நீதிபதி கருத்திற் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு, சந்தேகம், அவருக்கு ஏற்படாமல் தவிர்க்க முடியும். அல்லது, பிரதிவாதி தான் முன்வைக்கத் தவறிய சான்றுகளை மீண்டும் முன்வைக்க வாய்ப்பளிக்கும். அவ்வாறு முன்வைக்கும் சான்றுகளில் நியாயம் இல்லையெனில் அதற்கான காரணங்களையும் நீதிபதி தெளிவுபடுத்த வேண்டும்.'

**தீர்ப்பு வழங்குதல்**

நீதிபதியின் பணி வழக்குகளை விசாரித்துத் தீர்த்து வைத்தலாகும். வழக்கு விசாரணையின் தீர்வு விரைவாக குறுகிய காலப் பகுதிக்குள் அமைதல் சிறப்புக்குரியதாகவே கொள்ளப்படுகிறது. இதன் பயனாக உரித்துடைய ஒருவன் தனது உரிமையைத் தேவையான போது அனுபவித்திட வாய்ப்பு ஏற்படும். தீர்ப்பைத் தாமதித்தல் வழக்காளிகளுக்கு எந்தப்பயனையும் பெற்றுக் கொடுக்காது. தீர்ப்பைத் தாமதியாது விரைவுபடுத்தல் என்பது முன்வைக்கப்படும் வாதங்களையும், சமர்ப்பிக்கப்படும் சான்றுகளையும் ஆய்வு செய்யாமல் தீர்ப்பளித்தல் என்பதல்ல. மாறாக, வழக்காளி நீதிபதி மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழக்கச் செய்யுமளவுக்கு விசாரணையை பிற்படுத்துதல் போன்றவற்றையே குறித்து நிற்கிறது. தீர்ப்பை பிற்போடுவதால் வழக்காளிகள் தமக்குள் சமரசமாகிக் கொள்வர் எனக் கருதும் நிலையில் பிற்போடுவது சிறந்தது என்றே உமர் (ரழி) அவர்கள் ஆலோசனை வழங்கியமை காண்பிக்கிறது. 'நீங்கள் வழக்காளிகளைத் திருப்பியனுப்பி விடுங்கள். சில வேளை அவர்களே தமக்குள் சமரசம் செய்து கொள்ளலாம்' எனவும் உமர் (ரழி) அவர்கள் குறிப்பிட்டார்கள். (இப்னுல் கய்யூம், 2002)

நீதிபதி விசாரணையின் போதும், தீர்ப்பு வழங்கும் போதும் உரிய மனோநிலையைக் கொண்டிருத்தல் வேண்டும். அம்மனோநிலை முறைப்பாடுகளை நன்கு செவிமடுத்து, வழக்காளிகளின் சான்றுகளை நன்கு ஆராய்ந்து, வாதப்பிரதிவாதங்களைப் பரிசீலித்து சரியான தீர்ப்பினை வழங்கமுடியும். நீதிபதி கோபமாக இருக்கும் நிலையில் தீர்ப்பு வழங்க வேண்டாம் என்பதும், கோபமான நிலையிலிருக்கும் எவரும் இருவரிடையே தீர்ப்ப வழங்க வேண்டாம் என்பதும் நபிமொழிகளின் கருத்தாகும் (புகாரி,ஹதீஸ்:6839). உமர் (ரழி) அவர்களின் கடிதமும் கோபம், கவலை, குரோதம், சலிப்பு, கடும் வெறுப்பு, அருவருப்பு போன்ற மனோநிலைகளிலிருந்து தவிர்ந்திருக்குமாறு வலியுறுத்துகிறது. எனவே, கொடூர பசி, கொடுந்தாகம், பயம், கவலை, சிறுதூக்கம், நோய், அதீத மகிழ்ச்சி, தாங்க முடியாத வலி, கடும் குளிர், அதிவெப்பம், கடும் வியர்வை, தூக்கமின்மை, மிதமிஞ்சிய உணவருந்திய நிலை, மலசலம் கழிக்கும் தேவை போன்ற நிலைமைகளோடு சரியாகத் தீர்ப்பை வழங்குவது சாத்தியக் குறைவாகும். இந்நிலைகளிலிருந்து பாதுகாப்புத் தேடுமாறு அறிவுறுத்தும் நபிமொழி இங்கு குறிப்பிடத்தக்கது(புகாரி,ஹதீஸ்:5109). மேற்கூறப்பட்ட நிலைமைகள் நீதிச் செயற்பாட்டில் தீய விளைவுகளை ஏற்படுத்துவதை தற்கால ஆய்வுகள் காண்பிக்கின்றன. உடல் நலக் குறைவு, அஜீரணம் போன்றன நீதிபதிகளின் மனப்போக்கினை மாற்றியமைத்து தீர்ப்பளிப்பதில் பாதிப்புக்களை ஏற்படுத்திவிட முடியுமென அமெரிக்க சட்டத்துறை அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கருத்தை பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்லாமிய சட்ட இலக்கியங்கள் விதந்துரைக்கின்றன என வீரமந்த்ரி அவர்கள் குறிப்பிடுகின்றார் (வீரமந்த்ரி சி.ஜி, 2009)

**தீர்ப்பு மீளாய்வும் மேன்முறையீடும்**

தீர்ப்பு வழங்கலில் நீதிபதி தவறிலிருந்து பாதுகாக்கப்பட்டவரல்ல. தெளிவான மூல ஆவணங்களைப் புரிந்து கொள்வதிலும் சுய சிந்தனையைப் பயன்படுத்துவதிலும் தவறுகள் ஏற்படலாம். இந்நிலையில் தனது தீர்ப்பை நீதிபதி மீள்பரிசீலனை செய்வது அவசியமாகும். தனது தவறுக்காக பாவமன்னிப்பை வேண்டுதலும் வேண்டும். ஸூரா அந்நிஸாவின் வாசகங்களின் விளக்கவுரையில் 'திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் குற்றவாளி அல்ல' என தீர்ப்பு வழங்கப்பட்ட போது,"(முஹம்மதே!) அல்லாஹ் உமக்குக் காட்டித்தரும் அடிப்படையில் மக்கள் மத்தியில் நீர் தீர்ப்பு வழங்குவதற்காக உண்மையை உள்ளடக்கிய இவ்வேதத்தை உமக்கு அருளினோம். மோசடி செய்வோருக்கு வாதிடுபவராக நீர் ஆகிவிடாதீர். அல்லாஹ்விடம் நீர் பாவமன்னிப்புத் தேடுவீராக." என தீர்ப்பு மீளாய்வு செய்யப்படுவதன் அவசியத்தை அல் குர்ஆனிய வாசகங்கள் (அல் குர்ஆன் 4:105,106) வலியுறுத்துகின்றன. இதன் தொடர்பில், இப்னு கல்தூன் நீதிபதிகளுக்குப் பின்வருமாறு அறிவுறுத்துகிறார்.

> "நீதிபதி நீதிமன்ற அமர்விலிருந்து எழுந்து சென்ற பின் சுய மதிப்பீட்டுச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். அன்றைய நாள் அவர் வழங்கிய தீர்ப்புக்களை மீளாய்வு செய்து தவறுகள் ஏற்பட்டுள்ளதா என ஆய்தல் வேண்டும். அவ்வாறு தவறுகள் ஏற்பட்டிருப்பின், முடியுமான அளவு அவற்றைத் திருத்தியமைக்க முனைய வேண்டும்.' (அஹ்மத், 1996)

தீர்ப்புக்களை மீளாய்வு செய்தலை ஒரு முக்கிய செயற்பாடாக உமர் (ரழி) அவர்களுடைய கடிதம் காண்பிக்கின்றது. நீதிபதி தனது தவறான தீர்ப்பை வாபஸ் பெற்று பகிரங்கமாக அறிவித்தல் வேண்டும்.

கௌரவம், பதவியிழப்பு போன்ற பயம் அந்நிலையிலிருந்து அவரைத் தடுத்துவிடக் கூடாது. தவறான, அநீதியான தீர்ப்புக்கள் அவரை நரகில் ஆழ்த்திவிடும் என்பது இஸ்லாத்தின் தெளிவான போதனையாகும். பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு தீர்ப்பு,அதை வழங்கிய நீதிபதியினால் மாற்றப்பட முடியாதென்றும், அத்தீர்ப்பினை தெளிவான சான்றுகளோடு மீளாய்வு செய்த வேறொரு நீதிபதியினாலேயே மறுதீர்ப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கருதுவோரும் உண்டு. ஆயினும், இக்கருத்து அல்குர்ஆனுக்கும் நபிவழிக்கும் இஜ்மாவுக்கும் ஏற்புடையதல்ல எனக் குறிப்பிடப்படுகிறது (MK Masud et al,2006).

இஸ்லாமிய வரலாற்றில் நீதிபதிக்கும், அவரது அநீதமான, தவறான தீர்ப்புக்கும், துர்நடத்தைக்கும் எதிராக மேன்முறையீடு செய்யும் உரிமை மக்களின் அடிப்படை உரிமையாக கணிக்கப்பட்டது. இந்நிலையில் அவர்கள் ஆட்சியாளரிடமே தம்முறையீடுகளைச் சமர்ப்பித்தனர். இதற்கமைய சில வழக்குகள் அண்மையிலுள்ள வேறு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு புதிய நியாய விசாரணை மேற்கொள்ளப்பட்டதும் உண்டு. இஸ்லாமிய வரலாற்றின் பிற்காலப்பகுதியில் நீதிபதியின் செயற்பாட்டின் மீது மேற்பார்வை மேற்கொள்வதற்கான ஏற்பாடும் காணப்பட்டது. உஸ்மானிய ஆட்சியில் நீதிமன்றத்தில் இடம்பெற்ற துஷ்பிரயோகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பிரபல்யமானவை.

ஒரு வழக்கின் முடிவாக, வழக்காளிகளிடையே சமரசத்தை ஏற்படுத்துவதே இஸ்லாமிய நீதிப் பரிபாலனத்தின் நோக்கமாகும். 'உங்கள் சகோதரர்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துங்கள் போன்ற அல் குர்ஆனிய வசனங்கள் (அல் குர்ஆன் 49:10) நீதிபதி தனது தீர்ப்பினூடாக வாதிக்கும் பிரதிவாதிக்குமிடையே சமரசத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைக் காண்பிக்கிறது. நபியவர்களிடம் முன்வைக்கப்படும் பிணக்குகளுக்கு சமரச தீர்வே முன்வைக்கப்பட்டது என்பதை ஹதீஸ் குறிப்புக்கள் காண்பிக்கின்றன (புகாரி,ஹதீஸ்: 2276). ஸுபைர் அவர்களுக்கும் அன்ஸாரி தோழர் ஒருவருக்குமிடையிலான தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவது தொடர்பான பிணக்கு இருவருக்கும் சாதகமான சமரசத் தீர்வாக அமைத்துக் கொள்ள முயற்சிக்கப்பட்டது என்பது நோக்கத்தக்கது(புகாரி,ஹதீஸ்:2231). வழக்கை தாமதப்படுத்துதலை சமரசத்திற்கான ஒரு யுக்தியாகக் கொள்ள முடியும் என்று ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டது. ஒருவரின் உரிமைக்கான வழக்கில் சாட்சியங்களும் சான்றுகளும் முன்வைக்கப்படாத போது,அதன் தீர்ப்பு சமரசமாக அமைவது ஏற்புடையது என்பதையே நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரி காண்பிக்கிறது. பின்வரும் நிகழ்வு இதற்கான எடுத்துக்காட்டாகும்.

> 'நிச்சயமாக, நான் ஒரு மனிதன், நீங்கள் என்னிடம் வந்து வழக்காடுகிறீர்கள். உங்களில் சிலர் மற்றவரை விட ஆதாரத்தை எடுத்துரைப்பதில் நாவன்மை உடைவராக இருக்கலாம். எனவே, நான் அவ்வாதப்பிரதிவாதத்தை செவிமடுத்ததற்கேற்ப தீர்ப்பை வழங்குவேன். இவ்வாறு நான் (வாதத்தை அடிப்படையாகக் கொண்டு) ஒரு சகோதரனுடைய உரிமையை, (உரிமையில்லாத) மற்றவருக்கு (உரியதெனத்) தீர்ப்பு வழங்கினாலும், (உரிமையில்லாத) அவர் அதனை எடுக்க வேண்டாம். ஏனெனில், நான் அவருக்கு நரகத்தின் ஒரு துண்டையே பெற்றுக் கொடுக்கின்றேன். (தனக்கு உரிமையில்லாததை அவர் தன் வாதத்திறமையால் பெற்றுக் கொள்வது, அவரை நரகிற்கு இட்டுச் செல்லும்) என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறியவுடன், அவ்விரு வழக்காளிகளும் அழுதார்கள். (நரகத்தை அடைவதை விட ஆதாரமற்ற பொருளை விட்டுக் கொடுப்பதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார்கள்.) அவ்விருவரும் மற்றவரை நோக்கி 'எனது உரிமையை உனக்கு விட்டுத் தருகின்றேன்' என்று கூறிக்கொண்டு, அப்பொருளை எடுத்துக் கொள்ளுமாறு இருவரும் ஒருவரையொருவர் வலியுறுத்தினார்கள். இறுதியில் இருவரும் குலுக்கல் மூலம் தமது உரிமையை விட்டுக் கொடுக்க முன்வந்தார்கள் (புகாரி,ஹதீஸ்: 2680).

குறிப்பாக, குடும்பச்சட்டம் தொடர்புபட்ட வழக்கொன்றில் சமரசத்தின் தேவை இரட்டிப்பானதாகும். இஸ்லாத்தில் குடும்பம் சமூகக் கட்டமைப்புக்குத் தேவையான ஒரு சமூக நிறுவனமாகும். அந்நிறுவனம் சிதைவடைவதை அது ஆதரிக்கவில்லை. எனவேதான், குடும்ப பிணக்குகள் குறிப்பாக, கணவன் மனைவி இடையிலான முரண்பாடு வீட்டுச் சூழலியே தீர்க்கப்படுவதற்கான வழிமுறையை அல் குர்ஆன் விதந்துரைக்கின்றது.

> 'பிணக்கு ஏற்படுமென்று (மனைவியர் விடயத்தில்) நீங்கள் அஞ்சினால் அவர்களுக்கு அறிவுரை கூறுங்கள். படுக்கைகளில் விலக்குங்கள். அவர்களை அடியுங்கள். அவர்கள் உங்களுக்கு கட்டுப்பட்டுவிட்டால், அவர்களுக்கு எதிராக வேறு வழியைத் தேடாதீர்கள். அல்லாஹ் உயர்ந்தவனாகவும், பெரியவனாகவும் இருக்கின்றான். அவ்விருவரிடையே பிளவு ஏற்படும் என நீர் அஞ்சினால், அவன் குடும்பத்தின் சார்பில் ஒரு நடுவரையும், அவள் குடும்பத்தின் சார்பில் ஒரு நடுவரையும் அனுப்புங்கள். அவ்விருவரும் நல்லிணக்கத்தை விரும்பினால், அல்லாஹ் அவ்விருவருக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவான்.'(அல்குர்ஆன் 04:34,35)

வழக்காளிகள் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் தமது பிணக்கில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்படுத்த அனுமதிக்கப்படுவர். ஆயினும், மூன்றாம் தரப்பின் தீர்ப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பாக அமையாது. அத்தீர்ப்பு நீதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்படும் போது, அது தனியான உடன்பாடாகவே கொள்ளப்படும். குற்றவியல் வழக்கொன்றில் இம்மத்தியஸ்தம் ஏற்றுக்

கொள்ளத்தக்கதல்ல என்கின்றனர் சட்ட நிபுணர்கள் (MK Masud et al,2006).

**முடிவுரை**

இஸ்லாத்தில் நீதிப்பரிபாலனம் வணக்க வழிபாடுகளுள் ஒன்றாக கருதப்படுகிறது. எனவே, இஸ்லாமிய மூல ஆவணங்கள் இத்துறை தொடர்பில் போதிய விபரங்களை முன்வைக்கின்றது. நீதிபதிநீதிப்பரிபாலனத்தில் பிரதான செயற்பாட்டாளராக கருதப்படுகிறார். ஒழுங்கமைக்கப்பட்ட நீதிமன்ற முன்னெடுப்பு, சரியான தீர்ப்பளிக்கும் ஒழுங்கு போன்ற நீதிபதி கொண்டிருக்க வேண்டிய 'ஆதாப் அல்காழி'அம்சங்களை இஸ்லாமிய சட்டத்துறை விபரிக்கிறது. நீதிப் பரிபாலனத்தின் செயற்றிறன் பெரிதும் தீர்ப்பளித்தல் செயற்பாட்டின் பால் ஆனது. எனவே,வாதி, பிரதிவாதி, முறைப்பாட்டு விண்ணப்பம்,விசாரணை, சாட்சியங்கள்,சமரசம் செய்தல், உரிமையை உறுதிப்படுத்தல் பற்றிய செயற்பாட்டு முறைகளை இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் விவாதத்துக்கு உட்படுத்துகின்றனர். நவீன காலப்பகுதிப் பிரிவில் ஷரீஆ நீதிமன்ற விவகாரம் குடும்பச் சட்டம் தொடர்பானதாகவே சுருங்கிப் போய்விட்டது. இந்த வகையில் குடும்பங்களின் நிலைப்பேற்றுக்கு ஷரீஆ நீதிமன்றங்கள் பங்காற்ற வேண்டியுள்ளது.

**உசாத்துணைகள்**


1. அப்த் அல்-கரீம் ஸைதான் (1989) *நிழாமு அல்-கழா பில்-ஷரீஅத் அல்-இஸ்லாமிய்யா.* ஜோர்தான்: மக்தபதுல் பஷாயிர்.
2. அப்த் அல்-ஹஸீப் அப்த் அல்-ஸலாம் யூஸுப் (1986) *அல்-காழி வ அல்-பய்யினா.* குவைத்: மக்தபதுல் ம.்.லா.்.
3. அல்-மாவர்தி (1972) *அதப் அல்-காழி,* பக்தாத்: மத்பஅதுல் ஆபி.
4. அல்-மாவர்தி (1994) *அல்-அஹ்காம் அல்-ஸுல்தானிய்யா வ அல்-விலாயாத் அல்-தீனிய்யா,* லெபனான்: தாருல் கிதாப் அல் அரபி.
5. அல் ஹுமைழி, அப்துர் ரஹ்மான் (1989) *அல்-கழாஉ வநிழாமுஹு பி அல்-கிதாபி வ அல்-ஸுன்னா.* மக்கா: ஜாமிஆ உம்மில் குரா.
6. அல்-ஷர்ஈனி, முஹம்மத் இப்னு அஹ்மத் (1958) *முக்னி அல் முஹ்தாஜ்.* பா. 04. எகிப்து: முல்தஸமுத் தப.். வந்நஷ்ர்.
7. ஷலபி, அஹ்மத் (1975) *தாரீகுத் தஷ்ரீய் அல்-இஸ்லாமி வ தாரீகு அல்-நுழும் அல்-கழாஇய்யா பி அல்-இஸ்லாம்.* கெய்ரோ: மக்தபதுந்நஹ்லா அல் மிஸ்ரிய்யா.
8. அஸ் ஸுஹைலி, வஹபத் (2002) *அல்-பிக்ஹ் அல்-இஸ்லாமி வஅதில்லதுஹு.* 2ம் பதிப்பு. லெபனான்: தாருல் பிக்ர்.
9. அல்-ஸர்ஹஸி, ஷம்ஸுத்தீன் (1912) *அல்-மப்ஸூத்.* பேய்ரூத்: தாருல் ம.்.ரிபா.
10. இப்னு அபித் தம், அல்-காழி இப்றாஹீம் (1987) *கிதாபு அதப் அல்-கழா,* பேய்ரூத்: தாருல் குதுப் அல் இல்மிய்யா.
11. இப்னு பர்ஹுன் (2003) *தப்ஸிரத் அல்-ஹுக்காம் பீ உஸுல்அல்-அக்ழியதி வ மனாஹிஜ் அல்- அஹ்காம்.* ரியாழ்: தாரு ஆலமில் குதுப்.
12. இப்னு அல்-கய்யூம் (2002) *இ.்லாம் அல்-முவக்கிஈன்.*ரியாழ்: தாரு இப்னில் ஜவ்ஸி.
13. புஆத் அப்துல் முன்இம் அஹ்மத் (1996) *இப்னு கல்தூன் வறிஸாலதுஹு லி அல்-குழாத்.* ரியாழ்: தாருல் வதன்.
14. புகாரி (1987) *அல் ஜாமி.். அல்-ஸஹீஹ் அல்-முக்தஸர்.* பேய்ரூத்: தாரு இப்னில் கதீர் அல்யமாமா.
15. பைஹகீ (1925) *அஸ்ஸுனன்அல்-குப்ரா.* ஹைதராபாத்: மஜ்லிஸ் தாஇரதில் மஆரிப்.
16. வகீஉ (918) *அஹ்பார் அல்-குழாத்.*லெபனான்: ஆலமுல் குதுப்.
17. C.E. Besworthet al, *Encyclopedia of Islam*, London: B J Brill, 1991, V.6
18. MK Masud et al (2006) *Dispensing Justice in Islam: Qadis and their judgement*, Netherland: Brill